| | | | |
|---|---|---|---|
| 10.03.2021 | அசல் வழக்கு.எண்.35/2018 | வா.சா.1 | திருமதி. அனுராதா<br>க/பெ.வேணுகோபால் |

சாட்சி மீண்டும் திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

குறுக்கு விசாரணை -( 1 ம் பிரதிவாதி தரப்பில்)

நான் 6 ம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். இந்த வழக்கு பற்றிய முழு விபரம் எனக்கு தெரியும். மற்ற வாதிகளுக்காகவும் நான் சாட்சியம் அளிக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள வா சா ஆ 1 கிரைய ஒப்பந்தம் இருபது ரூபாய் முத்திரைதாளில் எழுதப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். வா சா ஆ 1 கிரைய ஒப்பந்தத்தில் ரூபாய் ஐந்து லட்சம் முன் பணம் கொடுத்ததாக சொல்லியிருக்கிறேன். அந்த ஐந்து லட்ச ரூபாய் முன் தொகைக்கான ஒரு சதவீத மதிப்புள்ள முத்திரைத்தாளில் மேற்படி ஒப்பந்தம் எழுதப்படவில்லை என்றால், சீக்கிரம் கிரையம் செய்து கொள்ளலாம் என்று எழுதினோம். முத்திரைத்தாள் மதிப்பு குறைவானது என்றால், சரிதான். கிரைய ஒப்பந்தம் 12.09.2014 தேதியிட்டப்பட்டது என்றால் சரிதான். 1.12.2012 தேதியிலேயே கிரைய ஒப்பந்தம் எழுதப்பட்டால் அது கட்டாயம் பதிவு செய்யப்பட வேண்டும் என விதி உள்ளது என்று எனக்கு தெரியும். முத்திரை தாள்களை, முத்திரைதாள் விற்பனையாளரிடம் இருந்து வெள்ளிங்கிரி வாங்கி வந்தார். முத்திரை தாள் எண். 04**AB** 212741 ல் நான் கையெழுத்து போட்டுள்ளேன்,. அதே போல் 04**AB** 212740 என்ற முத்திரைதாளில் நான் கையெழுத்து போட்டிருக்கிறேனா என்றால் ஞாபகம் இல்லை. வா சா ஆ 1 கிரைய ஒப்பந்தத்தில் 3 மாத கால கெடுவிற்குள் பாக்கி தொகையை செலுத்தி நாங்கள் கிரையம் செய்து கொள்ள வேண்டியது என உள்ளது என்றால் சரிதான். அதே ஒப்பந்தத்தில் 3 மாத கால கெடுவிற்குள் அவ்வாறு கிரையம் செய்து கொள்ள தவறினால் அட்வான்ஸ் தொகையை இழந்து விட வேண்டியது என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். 12.09.2014 க்கு பின்னிட்டு 3 மாத கால கெடுவிற்குள் கிரையம் செய்து தரக்கோரி பிரதிவாதிகளுக்கு அறிவிப்போ அல்லது கிரையம் செய்து தர கோரி வேறு நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. கிரையம் செய்து தரச்சொல்லி நேரில்கேட்டோம். அவ்வாறு கிரையம் செய்து தரக்கோரி நாங்கள் நேரில் கேட்கவில்லை என்றாலும், வழக்கிற்காக பின் யோசனையிட்டு அவ்வாறு நேரில் கேட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி சொத்திற்கு வடபுறமுள்ள பள்ளவாரி வழியாக உள்ள மாமூல்

ரோடு வழிநடை பாதை சகிதம் நாங்கள் போய் வந்து கொள்ள வேண்டியது என்று எழுதப்பட்டது என்றால் சரியல்ல. அவ்வாறு எழுதவில்லை. வா சா ஆ 1 கிரைய ஒப்பந்தத்தில என்னுடைய கையெழுத்து இருக்கிறது. ஆனால் மேற் சொன்னவாறு எழுதவில்லை. அந்த கிரைய ஒப்பந்தம் எழுதுவதற்கு ஆவண எழுத்தரிடம் விபரங்கள் யார் சொன்னது என்றால் வெள்ளிங்கிரி சொன்னார். பள்ளவாரி வழியாக நாங்கள் எந்த குழாயும் பதிக்கவில்லை என்றால் சரிதான். வா சா ஆ 1 ல் கண்ட சொத்துக்கு கிழபுறமாக குழாய் பதித்ததாக சொல்லியிருக்கிறேன். தென்வடல் பாதையில் குழாய் பதித்து கொள்ளலாம் என வா சா ஆ 1 ல் வாசகம் இருக்கிறதா என்றால், இல்லை. பொதுவாக ஒருவர் சொத்தை கிரையம் செய்து கொடுக்காமல் அந்த சொத்தில் எந்த மாறுதல் செய்ய இயலாது என்றாலும் நாங்கள் தாவாசொத்தில் குழாய் பதித்திருப்பதாக சொல்வது பொய் என்றாலும், சரியல்ல. அவ்ரகள் அனுமதியின் பேரில் தான் செய்தோம். கிணறு வெட்ட வேண்டும் என்றால், கிராம நிர்வாக அதிகாரியிடம் அனுமதி வாங்க வேண்டும்என்றால்சரிதான். அவரிடம் அனுமதி வாங்கியிருக்கிறோம். கிராம நிர்வாக அதிகாரியிடம் அனுமதி வாங்கியதற்கு ஆவணங்களை தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. அந்த ஆவணங்களை தாக்கல் செய்ய முடியும். தாவா சொத்தில் கிணறு வெட்ட கிராம நிர்வாக அலுவலரிடம் எந்த அனுமதியும் வாங்கவில்லை என்றாலும், அனுமதி வாங்கியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. உரிமை மாற்றமே நிகழாத நிலையில் கிணறு வெட்ட கிராம நிர்வாக அலுவலர் அனுமதி கொடுத்தாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா சா ஆ 1 ல் கிரையம் ஒப்பந்தம் செய்து கொண்டதாக காண்பிக்கப்பட்டுள்ள 26 நபர்களும் தலா எவ்வளவு முன் பண தொகை கொடுத்தார்கள் என்றால் ஒவ்வொருத்தரும் ரூ. 1,10,000 கொடுத்தார்கள். வா சா ஆ 1 கிரைய ஒப்பந்தம் ரூ.7,11,000/-த்துக்கு போடப்பட்டுள்ளது. வா சா ஆ 1 கிரைய ஒப்பந்தத்தில் உண்மையான மதிப்பு போடப்படவில்லை என்றால் சரியல்ல. உண்மையான மதிப்பு ரூ. 7,11,000 தான். நான் சொல்வது போல் தாவா சொத்தில் நாங்கள் கிணறு வெட்டவில்லை என்றாலும், சோலார் மின் ,இணைப்பு கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் அதில் ஏற்கனவே 1 ம் பிரதிவாதியின் பழைய கிணறு இருந்தது என்றால் சரிய ல்ல. அந்த கிணற்றை பற்றி எனக்கு தெரியாது. நாங்கள் வெட்டியதாக சொல்லும் கிணறுக்கு எவ்வளவு செலவானது என்றால், அதைப்பற்றி தெரியவில்லை. வா சா ஆ 1 ஒப்பந்தத்தில் கண்டுள்ள கிழமேலாக உள்ள பள்ளவாரி என்பது ஒரு

பெரிய ஓடை என்றால் சரிதான். அந்த ஓடையில் "அத்திக்கடவு அவினாசி சுத்திகரிப்பு திட்டத்தின் கீழ் கழிவு நீர்" வரும் என்றால் சரிதான். அந்த ஓடையில் உள்ள கழிவு நீரை கிணற்றுக்குள் விட்டு அதிலிருந்து சோலார் மின் மோட்டார் வைத்து எங்கள் நிலங்களுக்கு கொண்டு செல்கிறோம் என்றால் இல்லை. இது சம்பந்தமாக மேட்டுப்பாளையம் தாசில்தார் ஆய்வு செய்து அந்த கிணற்றுக்கும் ஓடைக்கும் இடையே பதித்துள்ள குழாய் மீது கான்கிரீட் கொட்டி மூடி விட்டார் என்றால் தவறு. அம்மாதிரி சம்பவம் நடக்கவில்லை. வா சா ஆ 1 கிரைய ஒப்பந்தத்தை நாங்கள் 1ம் பிரதிவாதியிடம் ஏற்படுத்தி கொள்ளவே இல்லை என்றால் சரியல்ல. அவருடன் நாங்கள் ஒப்பந்தத்தை ஏற்படுத்தி கொண்டோம். 2, 3 பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதியின் உறவினர்கள் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் தோட்டத்திற்கு தென்புறத்தில் அவர்களுக்கு நிலம் இருக்கிறது என்றால் சரிதான். 2, 3 பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதியின் உறவினர்கள் என்பதால் அவருடைய கிணற்றிலிருந்து குழாய் பதித்து அவர்கள் பூமிகளுக்கு நீர்பபாய்ச்ச அனுமதித்திருந்தார் என்றால் தவறு. நான் மற்ற வாதிகள் அனைவரும் சேர்ந்து அந்த பைப் லைனிலிருந்து தண்ணீர் எங்கள் நிலங்களுக்கு கொண்டு செல்ல வேண்டும் என்ற நோக்கத்தில் 2 ம் பிரதிவாதி உடன் சேர்ந்து கொண்டு மின் இணைப்பு வாங்க வேண்டும் என்று சொல்லி வா சா ஆ 1 ஒப்பந்தத்தில் 1ம் பிரதிவாதியிடம் மோசடியாக கையெழுத்து பெற்று விட்டோம் என்றால் தவறு. கிரைய ஒப்பந்தம் பதிவு செய்யப்பட வேண்டும் என்பதை தெரிந்திருந்தும், மோசடியாக பெற்ற ஆவணம் என்பதால் குறைவான மதிப்புள்ள முததிரைதாளில் பதிவு செய்யாத ஒரு ஆவணத்தை ஏற்படுத்தி உள்ளோம் என்றால் தவறு.

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.

SUB COURT, METTUPALAYA